**நவம்பர் – 20**

# TNPSC துளிகள்


- தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் இருந்து, தனது பொருளாதார ஆலோசனைக் குழுவின் (EAC) கூட்டத்திற்குக் காணொளி வாயிலாக தலைமை தாங்கினார்.
- அசாமின் தர்ரங்கா என்னுமிடத்தில் இந்திய-பூடான் எல்லையினூடே முதலாவது ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி (ICP) ஆனது திறக்கப்பட்டுள்ளது.
- BBL குழுமத்தின் நிறுவனர் T.P. கோபாலன் நம்பியார் சமீபத்தில் காலமானார்.
- GMR ஹைதராபாத் இன்டர்நேஷனல் ஏர்போர்ட் லிமிடெட் (GHIAL) ஆனது 2024 ஆம் ஆண்டு சவூதி விமான நிலையக் கண்காட்சியில் எண்ணிமக் கண்டுபிடிப்புகளில் அதன் முன்னேற்றங்களுக்காக 'விமான நிலையங்களுக்கானச் சிறப்பு விருதுகளை' பெற்றுள்ளது.
- பிரேசில் நாட்டின் வால்டெசி உர்கிசா புதிய இன்டர்போல் அமைப்பின் (சர்வதேசக் காவல்துறை) பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- துபாய் நகரம் ஆனது துபாய் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில், அதன் முதல் வான்வழி வாடகை வாகன சேவை நிலையத்தினை (வெர்டிபோர்ட்) அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.
- ஜப்பானின் அரசக் குடும்பத்தின் மிகவும் மூத்த உறுப்பினரும் பேரரசரின் பெரிய அத்தையுமான இளவரசி மிகாசா சமீபத்தில் காலமானார்.
- மொரீஷியஸ் நாட்டின் எதிர்க்கட்சிக் கூட்டணியானது, அந்நாட்டுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றுள்ளதையடுத்து அந்நாட்டின் பிரதமராக நவீன் ராம்கூலம் பதவியேற்று உள்ளார்.
- Nvidia மற்றும் SoftBank Corp ஆகியவை செயற்கை நுண்ணறிவு மற்றும் 5G இயக்கத்தினை ஒரே நேரத்தில் இயக்க கூடிய உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் 5G தொலைதொடர்பு வலையமைப்பின் சோதனையினைத் தொடக்கி உயுள்ளன.
    - இந்தச் செயல்முறையானது செயற்கை நுண்ணறிவு ரேடியோ அணுகல் வலை அமைப்பு (AI-RAN) எனப்படும்.
- உலகக் கருணை தினம் ஆனது உலகில் ஆண்டுதோறும் நவம்பர் 13 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## புதுமைப் பெண் திட்டத்தின் முதன்மை மதிப்பீடு

- தமிழ்நாடு மாநில திட்டக் குழுவானது (SPC) புதுமைப் பெண் திட்டத்தின் முதன்மை மதிப்பீட்டினை மேற்கொண்டுள்ளது.
- 13,681 கூடுதல் மாணவர்கள் இந்த முன்னெடுப்பினால் பயனடைந்ததன் மூலம், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பட்டயப் படிப்புகளை வழங்கும் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் சேர்ந்தனர்.
- இது 6.9 சதவீத அதிகரிப்பைக் குறிக்கிறது.
- அவர்களில், 38.6% பட்டியலிடப்பட்டச் சாதியினர் (SC), 34.4% மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC), மற்றும் 24.8%, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) ஆவர்.

- இதன்படி, சேலத்தில் அதிகபட்சமாக 8.9% கல்லூரி மாணவர் சேர்க்கை பதிவாகி உள்ளது, அதனைத் தொடர்ந்து சென்னை 5.8%; தர்மபுரி 5.5%; திருவண்ணாமலை 5.2%; நாமக்கல் 4.8%; மற்றும் கடலூர் 4.1% ஆகியவை உள்ளன.
- 2023 ஆம் ஆண்டின் இறுதியில் இத்திட்டத்தின் பயனாளிகளின் எண்ணிக்கை 2,30,820 ஆக இருந்தது.
- 17,032 (7.38%) எண்ணிக்கையுடன், சேலம் மாவட்டம் ஆனது இத்திட்டத்தின் மூலம் அதிக அளவில் பயனடைந்த மாணவர்களைக் கொண்டுள்ளது.
- அதனைத் தொடர்ந்து சுமார் 13,312 என்ற எண்ணிக்கையுடன் நாமக்கல் (5.77%); 11,915 எண்ணிக்கையுடன் தருமபுரி (5.16%); 11,468 எண்ணிக்கையுடன் சென்னை (4.97%); 11,146 எண்ணிக்கையுடன் திருவண்ணாமலை (4.83%); மற்றும் 10,777 எண்ணிக்கையுடன் கோயம்புத்தூர் (4.67%) ஆகியவை இடம் பெற்றுள்ளன.



Educational impetus

The State Planning Commission's preliminary analysis of the government's *Pudhumai Penn* scheme has shown that those in the rural areas have benefitted more from the initiative. A look at how the survey was carried out

**For greater good:** Chief Minister M.K. Stalin launching the *Pudhumai Penn* scheme in Chennai. Under the initiative, ₹1,000 a month would be disbursed to the beneficiaries till they complete their UG/Diploma/ITI degrees

- The survey was conducted in Erode, Vellore, Tiruvallur, Chennai, Sivaganga, Tenkasi, Villupuram and Tiruvarur districts, covering 5,095 students from 84 institutions including government, government-aided and self-finance institutions
- The main objectives were to assess the implementation of the scheme, the challenges, awareness levels among students, utilisation patterns of assistance, and the initiative's socio-economic implications among college students and their families
- The students involved in the analysis were drawn from streams such as diploma, arts and science, engineering, medicine and law. The survey was carried out from November 2023 to February 2024
- The survey involved qualitative and quantitative methods for data collection. A detailed questionnaire was developed to collect data from students who had not benefitted from the scheme
- Focus Group Discussions were held among college students who had benefitted from the scheme

# சர்வதேசச் செய்திகள்

## MATES திட்டம்

- 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல், இந்திய நாட்டினைச் சேர்ந்த திறமையான இளைஞர்களை தனது நாட்டில் வேலை செய்ய அனுமதிக்கும் புதியத் திட்டத்தினை ஆஸ்திரேலியா அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
- MATES என்பது திறமையான ஆரம்பநிலை தொழில்முறை வல்லுநர்களுக்கான புலம் பெயர்வு ஏற்பாடுகள் திட்டம் என்பதைக் குறிக்கும்.
- இது இந்தியப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் மற்றும் ஆரம்பநிலை தொழில் முறை வல்லுநர்கள் ஆஸ்திரேலியாவில் இரண்டு ஆண்டுகள் பணியாற்றச் செய்வதற்கான ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

❖ MATES திட்டப் பங்கேற்பாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட முறை இத்திட்டத்தில் பங்கேற்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.




# பொருளாதாரச் செய்திகள்

## எபிக்லோரோஹைட்ரின் மீதான எதிர்ப்பு இறக்குமதி குவிப்புத் தடுப்பு வரி

**WTO Framework on Trade Remedies**

| | Global Safeguards | Anti-Dumping measures | Countervailing Duties |
|---|---|---|---|
| **Legal Basis** | • GATT Article XIX | • GATT Article VI<br>• Agreement on Implementation of Article VI (AD Agreement) | • WTO Agreement on Subsidies and Countervailing Measures |
| **Objectives and Features** | • Create "breathing room" for domestic industry struggling with increasing imports<br>• MFN based import restrictions<br>• No allegations about unfair trade | • Protect domestic industry from imports sold "at less than the normal value of the products"<br>• Departure from MFN principle<br>• It's about the "unfair" (pricing) practices of individual firms | • Protect domestic industry from effects of another country's export subsidies actions<br>• Departure from MFN principle<br>• It's about the "unfair" (subsidies) practices of governments |
| **Measures** | • Supplementary tariffs beyond bound MFN rates | • Supplementary tariff beyond bound MFN rates targeted at particular foreign firms based on difference between the import price and the "normal" value | • Supplementary tariff beyond bound MFN rates based on the value of the subsidy provided by the government of the exporting country |
| **Criteria** | • Imports must be rising (absolute)<br>• Imports are causing "*serious*" injury to the domestic industry | • Dumping, thus pricing below (1) production cost or (2) market price<br>• Imports are causing "*material*" injury to the domestic industry | • Specific subsidies (financial contribution) by foreign governments that are exported<br>• Imports are causing "*material*" injury to the domestic industry |

❖ இந்திய அரசானது, சமீபத்தில் எபிக்லோரோஹைட்ரின் இறக்குமதிக்கு ஒரு டன்னுக்கு 557 அமெரிக்க டாலர்கள் வரை என்ற வீதத்தில் இறக்குமதி குவிப்புத் தடுப்பு வரியை விதித்துள்ளது.

❖ இது சீனா, தென் கொரியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பசைத் தொழில் துறையில் முதன்மையாகப் பயன்படுத்தப்படும் ஒரு இரசாயனமாகும்.

❖ அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்க உள்ள இந்த வரியானது, குறைந்த விலை இறக்குமதியினால் ஏற்படும் பாதகமானத் தாக்கங்களில் இருந்து இந்திய உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டது.

❖ உள்நாட்டுத் தொழில்துறைகளைப் பெருமளவு சீர்குலைத்து நியாயமற்றப் போட்டிக்கு


வழி வகுக்கின்ற வகையில் சில பொருட்கள் நியாயமானச் சந்தை மதிப்பை விட மிக குறைவான விலையில் இறக்குமதி செய்யப்பட்டு விற்கப்படுவதைத் தடுப்பதற்காக, இறக்குமதி குவிப்புத் தடுப்பு வரிகள் விதிக்கப்படுகின்றன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## லெசர் உணவுப்புழு லார்வாக்கள்

- கென்யா லெசர் உணவுப் புழு (மாவுப் புழு) லார்வாக்களை பாலிஸ்டைரீனை உண்டு அவற்றின் குடலில் உள்ள பாக்டீரியாக்களைக் கொண்டு அந்த நெகிழிப் பொருளைச் சிதைக்க உதவுகிறது.
- லெசர் உணவுப் புழு என்பது அல்பிடோபியஸ் கரு வண்டுகளின் லார்வா வடிவமாகும்.
- இந்தப் பாக்டீரியாக்கள் நெகிழிகளை ஜீரணிக்கக்கூடிய (சிதைக்கக் கூடிய) பல்வேறு நொதிகளை உற்பத்தி செய்கின்றன.
- லார்வா ஆனது காலம் 8 முதல் 10 வாரங்கள் வரை நீடிக்கும்.
- பாலிஸ்டைரீன் ஸ்டைரோஃபோம் என அழைக்கப்படுகிறது.
- இது உணவு, மின்னணு மற்றும் தொழில்துறைச் சரக்குப் பொதிகளில் பரவலாகப் பயன்படுத்தப் படும் ஒரு நெகிழி பொருள் ஆகும்.

Life Cycle of the Mealworm




# சுற்றுச்சூழல் செய்திகள்

## சுக்னா ஏரி - ESZ

- மத்திய அரசானது, சுக்னா வனவிலங்கு சரணாலயத்தைச் சுற்றியுள்ள 1 கிலோ மீட்டர் முதல் 2.035 கிலோ மீட்டர் வரையிலான ஒரு பகுதியை ஹரியானா மாநில எல்லையில் அமைந்த சுற்றுச்சூழல் தாங்கு மண்டலமாக (ESZ) வரையறுக்க உள்ளது.
- ESZ மண்டலத்தின் அனைத்து நடவடிக்கைகளும் 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழான விதிகளால் நிர்வகிக்கப்படும்.
- இந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதற்குத் தடை செய்யப்பட்ட நடவடிக்கைகளில் வணிக ரீதியிலான சுரங்கம், கல் குவாரி மற்றும் கல் உடைப்பு ஆலைகள், புதிய

மரச்சட்ட அறுப்பு ஆலைகள் அமைத்தல் மற்றும் மாசுபடுத்தும் தொழிற்சாலைகளை அமைத்தல் ஆகியவை அடங்கும்.

- சுக்னா வனவிலங்கு சரணாலயம் ஆனது சண்டிகர் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதோடு இது பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களுடன் தனது எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது.




## உலகின் மிகப்பெரிய பவளப்பாறை




- இதுவரையில் பதிவு செய்யப்படாத அளவு மிகப்பெரிய பவளப்பாறை ஆனது தென் மேற்குப் பசிபிக் பெருங்கடலில் அறிவியலாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது.
- சாலமன் தீவுகளின் கடற்பகுதியில் உள்ள இது சுமார் இரண்டு கூடைப்பந்து

மைதானங்களைப் போல மிகப் பெரியது மற்றும் விண்வெளியில் இருந்து புலப்படும் வகையில் உள்ளது.

- இணைக்கப்பட்ட பல்வேறு பவளப் பாறைகளின் தொகுப்பான இந்த மாபெரும் பவளப் பாறையானது 300 ஆண்டுகளுக்கு மேல் பழமையானதாக இருக்கலாம்.

## கேரளாவில் செந்தலைக் கழுகு

- மிக அருகி வரும் நிலையில் உள்ள செந்தலைக் கழுகு ஆனது காசர்கோடு பகுதியில் முதன்முதலாக தென்பட்டுள்ளது.
- இந்தப் பறவையானது, "ஆசிய இராஜக் கழுகு" என்றும் அழைக்கப்படுகிறது.
- இது அதன் செந்தலை மற்றும் 2.5 மீ வரையிலான இறக்கைகள் ஆகியவற்றினைக் கொண்டு வேறுபடுத்தப்படுகிறது.
- இது பொதுவாக மத்திய இந்தியா, நேபாளம், மியான்மர், தாய்லாந்து, வியட்நாம் மற்றும் கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டின் சில பகுதிகளில் காணப்படுகிறது.



## டைட்டன் ஆரம் மலர்


- பெரும்பாலும் டைட்டன் ஆரம் என சுருக்கிக் கூறப்படுகின்ற அமோர்போபால்லஸ் டைட்டனம் ஆனது ஆஸ்திரேலியாவின் மெல்போர்னின் தெற்குப் பகுதியில் பூத்து உள்ளது.
- ஒரு தசாப்தத்திற்கு ஒருமுறை என்று பூக்கும் இது உலகின் மிகப்பெரிய மலர்களில் (10 அடிக்கு மேலான உயரம் வளரும்) ஒன்றாகும்.
- இந்தப் பூ ஆனது அழுகிய இறந்த உடல்கள் போன்ற மணத்தைக் கொண்டுள்ளன.
- இந்தோனேசியாவின் மேற்கு சுமத்ராவைத் தாயகமாகக் கொண்ட இது 'பிண மலர்' என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்த மலர் குறித்து இத்தாலிய தாவரவியலாளர் ஒடோர்டோ பெக்காரி என்பவரால் 1878 ஆம் ஆண்டில் முதன்முதலில் விவரிக்கப்பட்டது.

- இந்த மலர் ஆனது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் "அருகி வரும்" இனம் ஆக பட்டியலிடப் பட்டுள்ளது.



# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## வேளாண் கொள்கை கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு 2024 அறிக்கை




- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD) ஆனது இந்த முக்கிய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் கீழ் மதிப்பிடப்பட்ட 54 நாடுகளில் வேளாண் துறைக்கான மொத்த

நிதி ஆதரவு 2021-23 ஆம் ஆண்டில் ஆண்டிற்கு சராசரியாக 842 பில்லியன் டாலர் ஆகும்.

- 2021 ஆம் ஆண்டில் இருந்த உச்சத்தை விட, 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளில் இத்துறைக்கான நிதி வழங்கல்கள் குறைந்துள்ளன.
- வேளாண் துறைக்கான நிதி ஆதரவில் 12.6% ஆனது புத்தாக்கம், உயிரியல் பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு போன்ற முக்கியச் சேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.
- 5% நிதி ஆதரவு ஆனது தேவைகளுக்கு அப்பாற்பட்ட பல்வேறு தன்னார்வ சுற்றுச்சூழல் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.
- சீனா, அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை முறையே 37%, 15%, 14% மற்றும் 13% நிதி ஆதரவுடன் சில பெரிய நாடுகளில் வேளாண் துறைக்கான நிதி ஆதரவு அதிகமாக உள்ளது.
- 2021-23 ஆகிய காலகட்டத்தில் தனிப்பட்ட விவசாயிகள் நேர்மறையான நிதி ஆதரவில் ஆண்டிற்கு 628 பில்லியன் அமெரிக்க டாலர்களைப் பெற்றனர்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இந்தியப் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ள விருதுகள்



- நைஜீரியா நாடு தி கிராண்ட் கமாண்டர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் தி நைஜர் (GCON) என்ற விருதினை வழங்கி இந்தியப் பிரதமரை கௌரவிக்க உள்ளது.
- 1969 ஆம் ஆண்டில் இந்த GCON விருது பெற்ற ஒரே வெளிநாட்டுப் பிரமுகர் எலிசபெத் மகாராணி ஆவார்.
- தற்போதைய இந்தியப் பிரதமருக்கு வழங்கப்படும் 17வது சர்வதேச விருது இதுவாகும்.
- டொமினிகா காமன்வெல்த் நாட்டு அரசானது, அந்நாட்டின் உயரிய தேசிய விருதான டொமினிகா விருதினை இந்தியப் பிரதமருக்கு வழங்கி கௌரவிக்க உள்ளது.
- இது கோவிட்-19 பெருந்தொற்றுகளின் போது டொமினிகாவிற்கு அவர் ஆற்றியப் பல பங்களிப்புகள் மற்றும் இந்தியாவிற்கும் டொமினிக்காவிற்கும் இடையிலான நட்புக் கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கான அவரது அர்ப்பணிப்புக்கான அங்கீகாரம் ஆகும்.
- டொமினிகா விருதானது இதற்கு முன்னர், கியூபாவின் தலைவரும் புரட்சியாளருமான ஃபிடல் காஸ்ட்ரோவிற்கு வழங்கப்பட்டது.

- மேலும் டொமினிகாவின் ஒவ்வொரு அதிபருக்கும் இந்த மரியாதை வழங்கப்படுகிறது.

# முக்கிய தினங்கள்

## உலகப் பயன்பாட்டுத் தினம் - நவம்பர் 14

- இது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத்தின் இரண்டாவது வியாழன் அன்று வெகுவாக கொண்டாடப் படுகிறது.
- இது இந்த ஆண்டு காணொளி வாயிலான சுகாதாரச் சேவை, மின்னணு சுகாதாரப் பதிவுகள் மற்றும் பிற சுகாதாரம் தொடர்பான தொழில்நுட்பங்களின் மதிப்புகளை ஊக்குவிக்கிறது.
- 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், பயனர் அனுபவ நிபுணத்துவச் சங்கமானது இந்த நாளை உருவாக்கியது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Designing for a Better World" என்பது ஆகும்.




## ஜன்ஜாதியா கௌரவ் திவாஸ் அல்லது பழங்குடியினரின் பெருமை தினம் - நவம்பர் 15




- பிர்சா முண்டா அவர்களின் பிறந்தநாள் ஆனது 2021 ஆம் ஆண்டு முதல் ஜன்ஜாதியா கௌரவ் திவாஸாக அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு பிர்சா முண்டா அவர்களின் 150வது பிறந்த நாள் நிறைவைக் குறிக்கிறது.
- மத்திய அரசானது, அவரது 150வது பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஒரு நினைவு

சின்னத்தினையும் நாணயத்தினையும் வெளியிட்டுள்ளது.

- பிர்சா முண்டா அவர்கள் 19 ஆம் நூற்றாண்டின் பழங்குடியினத் தலைவர் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலத்தினைச் சேர்ந்த ஒரு காலனித்துவ எதிர்ப்பு போராளி ஆவார்.


### ஜார்க்கண்ட் மாநில உருவாக்க தினம் - நவம்பர் 15




- 2000 ஆம் ஆண்டின் பீகார் மறுசீரமைப்புச் சட்டத்திற்கு முன்னதாக இது பீகாரின் ஒரு பகுதியாக இருந்தது.
- "காடுகளின் நிலம்" என்றும் குறிப்பிடப் படும் ஜார்க்கண்ட் மாநிலம் இயற்கையாகவே அதிகக் கனிம வளங்களைக் கொண்டுள்ளது.
- இதன் 29 சதவீத நிலப்பரப்பு ஆனது காடுகள் மற்றும் வனப்பகுதிகளால் சூழப்பட்டுள்ள நிலையில் இந்த மாநிலம் எந்தவொரு இந்திய மாநிலத்திலும் இல்லாத அளவிலான அதிக வனப்பரவல் விகிதத்தைக் கொண்டுள்ளது.

## இதரச் செய்திகள்

### வாக்கிங் நிமோனியா




- அமெரிக்கா முழுவதும் - குறிப்பாக குழந்தைகளிடையே வாக்கிங் நிமோனியா என்ற நோயானது குறிப்பிடத் தக்க வகையில் அதிகரித்துள்ளது.
- வாக்கிங் நிமோனியா (பெரிதளவில் உடல்நலக் குறைவு ஏற்படாத ஒரு நிமோனியா) என்பது மிதமான பாதிப்பு கொண்ட ஒரு நிமோனியா வடிவமாகும்.

- இது பொதுவாக மைக்கோப்ளாஸ்மா நிமோனியா என்ற பாக்டீரியாவால் ஏற்படும் குறைவான தீவிரத் தன்மை கொண்ட ஒரு நுரையீரல் தொற்று ஆகும்.
- நீர்த்திவலைகளில் உள்ள பாக்டீரியாவை மற்றவர்கள் மூச்சு மூலமாக உள்ளே இழுப்பதனால் இத்தொற்று ஏற்படலாம்.
- இந்த வகை நிமோனியா உள்ள பெரும்பாலான குழந்தைகளுக்கு வீட்டிலேயே ஓய்வு எடுக்கும் அளவிற்கு உடல் நலம் குன்றி காணப்படுவதில்லை, எனவே இது "வாக்கிங்" நிமோனியா என்று அழைக்கப்படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★